# திருத்தங்கல் நகராட்சி
## சாதாரண கூட்டம்

நிகழும் ஸ்ரீவிளம்பி வருடம் மாசி திங்கள் **16**ம் நாள்.**28–02–2019** ம் தேதி வியாழகிழமை காலை **11.00** மணியளவில் நகராட்சி அலுவலகத்தில் வைத்து சாதாரண கூட்டம் நடைபெறும்.

**முன்னிலை : திரு.மா. சுவாமிநாதன்**

திருத்தங்கல் நகராட்சி
நாள் . 22–02–2019

தனிஅலுவலர்
திருத்தங்கல் நகராட்சி

**பொருள்–258**

திருத்தங்கல் நகராட்சி சிவகாசி சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி திட்டம் 2018-2019 கீழ்காணும் பணிக்கு விருதுநகர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை தலைவர்/மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை ஆணை எண்.ந.க.சி3/3068/2017 நாள்.25.01.2019-ன் படி நிர்வாக அனுமதி வழங்கியது பின்வருமாறு.

| **வ. எண்** | **வேலையின் விவரம்** | **மதிப்பீட்டுத் தொகை ரூ.இலட்சத்தில்** | **சட்டமன்ற உறுப்பினர் நிதி ஒதுக்கீடு ரூ.இலட்சத்தில்** | **நகராட்சி பொது நிதி ரூ. இலட்சத்தில்** |
|---|---|---|---|---|
| 1 | **திருத்தங்கல் நகராட்சி**<br>வார்டு எண். 01 அண்ணா காலனியில் நியாய விலைக்கட்டிடம் கட்டும் பணி | 10.00 | 5.00 | 5.00 |

மேற்படி பணிக்கான மதிப்பீட்டு தொகை ரூ.10.00 இலட்சம் ஆகும். மேற்படி பணிக்கு சட்டமன்ற உறுப்பினர் நிதி ஒதுக்கீடு ரூ.5.00 இலட்சம் போக மீதமுள்ள தொகை ரூ.5.00 இலட்சம் மட்டும் நகராட்சி பொது நிதியின் மூலம் மேற்கொள்ள மன்றத்தின் நிர்வாக அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

மன்றம் அனுமதிக்கலாம்

ந.க.எண்.2376/2018/இ1
**பொருள்–259**

திருத்தங்கல் நகராட்சி பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் பகுதி வளர்ச்சி திட்டம் 2018-19-ன் கீழ் இந்நகர் பகுதியில் பல்வேறு இடங்களில் சிறிய மின் கோபுர விளக்குகள் மற்றும் LED தெருவிளக்குகள் அமைக்கும் பணிக்கு பரிந்துரை செய்யப்பட்டதன் விவரம் பின்வருமாறு..

| **வ.எண்** | **வேலையின் பெயர்** | **மதிப்பீட்டுத் தொகை ரூ. இலட்சத்தில்** | **பாராளுமன்ற உறுப்பினர் ஒதுக்கீட்டுத் தொகை ரூ.இலட்சத்தில்** | **நகராட்சி பங்குத்தொகை ரூ. இலட்சத்தில்** |
|---|---|---|---|---|
| 1 | திருத்தங்கல் நகராட்சி வார்டு எண். 21 சிவகாசி - விருதுநகர் ரோடு ராஜ்கமல் ஹோட்டல் முதல் சுக்கிரவார்பட்டி ரோடு வரை 12 மின் கம்பங்களில் 150 வாட்ஸ் LED பல்ப் கொண்ட 12 மின்விளக்குகள் அமைக்கும் பணி | 3.35 | 3.35 | 0.83 |
| 2 | திருத்தங்கல் நகராட்சி வார்டு எண். 21 சுக்கிரவார்பட்டி ரோட்டில் 18 மின் கம்பங்களில் 150 வாட்ஸ் LED பல்ப் கொண்ட 18 மின்விளக்குகள் அமைக்கும் பணி | 5.00 | 5.00 | 1.22 |

| | | | | |
|---|---|---|---|---|
| 3 | திருத்தங்கல் நகராட்சி வார்டு எண். 21 சுக்கிரவார்பட்டி ரோடு குறுக்குத் தெருவில் ரோட்டில் 5 மின் கம்பங்களில் 150 வாட்ஸ் LED பல்ப் கொண்ட 5 மின்விளக்குகள் அமைக்கும் பணி | 1.40 | 1.40 | 0.35 |
| 4 | திருத்தங்கல் நகராட்சி வார்டு எண். 18 சுக்கிரவார்பட்டி ரோடு குறுக்குத் தெருவில் ரோட்டில் 5 மின் கம்பங்களில் 150 வாட்ஸ் LED பல்ப் கொண்ட 5 மின்விளக்குகள் அமைக்கும் பணி | 1.40 | 1.40 | 0.35 |
| 5 | திருத்தங்கல் நகராட்சி வார்டு எண். 18 சுக்கிரவார்பட்டி ரோடு குறுக்குத் தெருவில் ரோட்டில் 5 மின் கம்பங்களில் 150 வாட்ஸ் LED பல்ப் கொண்ட 5 மின்விளக்குகள் அமைக்கும் பணி | 1.40 | 1.40 | 0.35 |
| 6 | திருத்தங்கல் நகராட்சி வார்டு எண் 18-ல் சுக்கிரவார்பட்டி ரோடு பாலாஜி நகரில் 12 மீட்டர் உயரமுள்ள 6 எண்ணிக்கை கொண்ட 150 வாட்ஸ் LED பல்ப், தானியங்கி சுவிச்சு உடன் கூடிய சிறிய மின் கோபுர விளக்கு அமைக்கும் பணி | 3.50 | 3.50 | - |
| 7 | திருத்தங்கல் நகராட்சி வார்டு எண் 19-ல் ஆசாரிமார் நந்தவனத் தெருவில் 12 மீட்டர் உயரமுள்ள 6 எண்ணிக்கை கொண்ட 150 வாட்ஸ் LED பல்ப், தானியங்கி சுவிச்சு உடன் கூடிய சிறிய மின் கோபுர விளக்கு அமைக்கும் பணி | 3.50 | 3.50 | - |

மேற்காண் பணிகள் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை தலைவர் / மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை ஆணை எண். ந.க.சி10/2180/2019 நாள்.28.1.2019-ன் படி நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது. மேலும் மேற்காண் பணிகளுக்கான மொத்த மதிப்பீட்டுத்தொகை ரூ. **19.55** ஆகும். மேற்படி பணிகளுக்கு பாராளுமன்ற உறுப்பினர் ஒதுக்கீடு தொகை ரூ. **16.45** இலட்சம் போக மீதம் உள்ள தொகை ரூ. **3.10** இலட்சம் மட்டும் பொதுநிதியாக மேற்கொள்ள தொடர்ந்து மேற்படி பணிகளை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு–</u>
அனுமதி அளிக்கலாம்.

(ந.க.எண் : 3789/இ1/2018)

**பொருள்–260**

திருத்தங்கல் நகராட்சி வார்டு எண்.**01** சிவகாசி விருதுநகர் ரோடு தெருவில் அமைந்துள்ள ஸ்ரீனிவாஸ் பைன் ஆர்ட்ஸ் காலியிட வரி நிர்ணயம் செய்யப்படுவதற்கு எதிராக சார்புநீதிமன்றம் சிவகாசியில் வழக்கு தொடரப்பட்டு OS.No./10/2016 வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டு நகராட்சிக்கு ஆதரவாக தீர்ப்பு வரப்பட்டுள்ளது.

மேலும் மேற்படி தீர்ப்பை எதிர்த்து உயர்நீதிமன்றம் சென்னை W.P.1572/2019 மூலமாக மேல்முறையீடு செய்யப்பட்டுள்ளது. பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது. மேற்படி வழக்கு தொடர்பாக நகராட்சி ஆணையாளர் சார்பாக வாதிடுவதற்கு திரு. பி.எஸ். சிவசண்முகசுந்தரம் அரசு சிறப்பு வழக்கறிஞர் அவர்களை நியமனம் செய்து வழக்கறிஞர் கட்டணம் தொகை ரூ. **20,000/–** (வழக்கறிஞர் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளப்படி) சம்பந்தப்பட்ட வழக்கறிஞருக்கு வழங்குவதற்கும் மேற்படி வழக்கு தொடர்பாக ஏற்படும் இதர செலவின தொகைக்கும் மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.
அலுவலக குறிப்பு–

1. மன்றம் அனுமதி வழங்கலாம்
2. வழக்கின் அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

பொருள்–261

திருத்தங்கல் நகராட்சி பொது நிதித் திட்டம் 2018-19 (General Fund 2018-19) திட்டத்தின் கீழ் 30.01.2019 தேதி அன்று வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகள் விபரம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் விபரம் | மதிப்பீட்டு தொகை (இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | ஒப்பந்தப்புள்ளி விபரம் (%குறைவு ரூ. % கூடுதல்) |
|---|---|---|---|---|
| 1. | **திருத்தங்கல் நகராட்சி** வார்டு எண் 1 முதல் 10 வரை உள்ள குடிநீர் குழாய்கள் பழுது பார்க்கும் வருடாந்திர ஒப்பந்தம் (பொருள்கள் உள்பட) பணி | 8.00 | திரு.எம்.கண்ணன் | 0.34% குறைவு |
| | | | திரு.எம்.ஐயப்பன் | 0.27% குறைவு |
| 2. | **திருத்தங்கல் நகராட்சி** வார்டு எண் 11 முதல் 21 வரை உள்ள குடிநீர் குழாய்கள் பழுது பார்க்கும் வருடாந்திர ஒப்பந்தம் (பொருள்கள் உள்பட) பணி | 8.00 | திரு.எம்.கண்ணன் | 0.29% குறைவு |
| | | | திரு.எம்.ஐயப்பன் | 0.15% குறைவு |

மேற்படி பணிகளுக்கு வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட வரிசை எண்.1-ல் 0.34% குறைந்த ஒப்பந்தப்புள்ளி மற்றும் வரிசை எண்.2-ல் 0.29% குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள ஒப்பந்ததாரர் **திரு.எம்.கண்ணன்** அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்

(ந.க.எண் : 351/இ1/2018)

பொருள்–262

திருத்தங்கல் நகராட்சி பொது நிதித் திட்டம் 2018-19 (General Fund 2018-19) திட்டத்தின் கீழ் 31.01.2019 தேதி அன்று வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகள் விபரம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் விபரம் | மதிப்பீட்டு தொகை (இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | ஒப்பந்தப்புள்ளி விபரம் (%குறைவு ரூ. % கூடுதல்) |
|---|---|---|---|---|
| 1. | **திருத்தங்கல் நகராட்சி** வார்டு எண்: 01 அண்ணா காலனி 60,000 லிட்டர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கு பம்பிங் மெயின் மாற்றி அமைக்கும் பணி | 6.00 | திரு.பி.முருகன் | 0.41% குறைவு |
| | | | திரு.எம்.கண்ணன் | 0.36% கூடுதல் |

மேற்படி பணிகளுக்கு வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.41% குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள ஒப்பந்ததாரர் **திரு.பி.முருகன்** அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்

(ந.க.எண் : 3785/இ1/2018)

**பொருள்–263**

திருத்தங்கல் நகராட்சி பொது நிதித் திட்டம் 2018-19 (General Fund 2018-19) திட்டத்தின் கீழ் 30.01.2019 தேதி அன்று வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகள் விபரம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் விபரம் | மதிப்பீட்டு தொகை (இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | ஒப்பந்தப்புள்ளி விபரம் (%குறைவு ரூ. % கூடுதல்) |
|---|---|---|---|---|
| 1. | **திருத்தங்கல் நகராட்சி**<br>எஸ்.என் புரம் சாலையில் உள்ள பம்பிங் மெயின் குழாய் மாற்றி அமைக்கும் பணி | 3.00 | திரு.பி.முருகன் | 0.41% குறைவு |
| | | | திரு.எம்.கண்ணன் | 0.36% குறைவு |

மேற்படி பணிகளுக்கு வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.41% குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள ஒப்பந்ததாரர் **திரு.பி.முருகன்** அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்

(ந.க.எண் : 2283/இ1/2018)

**பொருள்–264**

இந்நகராட்சி பகுதியில் செய்தி தாளில் விளம்பரம் செய்த இனங்களுக்கு பட்டியல் வரப்பெற்றுள்ளது.

1. திருத்தங்கல் நகராட்சி பிளாஸ்டிக் ஒழிப்பு விழிப்புணர்வு தொடர்பான விளம்பர அறிவிப்பு தினகரன் நாளிதழில் 15.01.2019-ம் தேதியன்று விளம்பர அறிவிப்பு வெளியிடப்பட்டமைக்கான பட்டியல் வரப்பெற்றுள்ளது. பட்டியல் எண். 3300131754 நாள். 15.01.2019 தொகை ரூ. 25,771.20/- (இருபத்தி ஐந்தாயிரத்தி ஏழு நூற்றி எழுபத்தி ஒரு ரூபாய் இருபது பைசா மட்டும்) மேற்படி நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது

2. திருத்தங்கல் நகராட்சி தமிழக அரசின் இரண்டாண்டு சாதனை சிறப்பு மலர் இந்நகராட்சியில் நடைபெற்று வரும் வளர்ச்சிப் பணிகள் குறித்த விளம்பர அறிவிப்பு 24.02.2019-ம் தேதிய தினத்தந்தி நாளிதழில் வெளியிடப்பட்டது. மேற்காண் விளம்பரத்திற்கு மாவட்ட ஆட்சியர் அவர்கள் நிர்ணயம் செய்த தொகையினை விட கூடுதலாக வழங்க மேற்காண் நாளிதழிடமிருந்து பட்டியல் வரப்பெற்றுள்ளது. பட்டியல் எண். MDU1819-00030437 நாள். 24.02.2019 தொகை ரூ.85759/- ( ரூபாய் என்பத்தி ஐந்து ஆயிரத்தி ஏழு நூற்றி ஐம்பத்தி ஒன்பது மட்டும்) மேற்படி நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்

( ந.க.எண். 619/2019/இ1)

பொருள்–265

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் 01.04.2019 முதல் திருத்தியமைக்கப்படவுள்ள குடி நீர் துணை விதிகளில் புதிய குடிநீர் கட்டணம் மற்றும் வைப்புத்தொகை விகிதங்கள் மாவட்ட அரசிதழில் வெளியிடுவதற்கு ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ. 65,000/– (ரூபாய் அறுபத்தி ஐந்தாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக்குறிப்பு–**

மன்றம் அனுமதிக்கலாம்

(ந.க.எண்.3257/2018/இ1)

**பொருள்–266**

திருத்தங்கல் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் 01.04.2019 முதல் நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.14112/2018/குவ3 நாள்.27.12.2018 படியும் மற்றும் தமிழ்நாடு நகர்புற உள்கட்டமைப்பு நிதி நிறுவனம் மூலமாக நிதி பகிர்வு மற்றும் அதனை சார்ந்த நிதி நிலைத் தன்மை அறிக்கை (Financial Viability Statement ) படி திருத்தங்கல் நகராட்சி குடிநீர் துணை விதிகளில் கீழ்கண்ட விவரப்படி புதிய கட்டணம் மற்றும் வைப்புத் தொகை விகிதங்கள் திருத்தியமைக்கப்பட்ட நகர்மன்ற தீர்மான எண். 170 நாள்.31.10.2018-ன் படி ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

| (i).தற்போது வசூலிக்கப்படும் குடிநீர் கட்டணத் தொகைரூ. | உப விதிகளின் படி திருத்தம் செய்யப்பட வேண்டிய குடிநீர் கட்டணத் தொகைரூ. |
|---|---|
| 1 | 2 |
| 1.வீட்டு உபயோகம் ரூ.50/-<br>2. தொழிற்சாலைகள் ரூ.100/-<br>3. வணிக நிறுவனங்கள் ரூ. 100/- | **(அ) குடியிருப்பு உபயோகம் :**<br>**1) 500 சதுர அடிக்கு குறைவானது :**<br>மாதாந்திர கட்டணம் ரூ. 120/–<br>**2) 501 முதல் 1200 சதுர அடி வரை :**<br>மாதாந்திர கட்டணம் ரூ. 150/–<br>**3) 1201 முதல் 2400 சதுர அடி வரை :**<br>மாதாந்திர கட்டணம் ரூ. 180/–<br>**4) 2401 சதுர அடிக்கு மேல் :**<br>மாதாந்திர கட்டணம் ரூ. 210/–<br>(ஆ) **குடியிருப்பில்லாத / தொழிற்சாலைகள் சார்ந்த உபயோகம் :**<br>**1) 500 சதுர அடிக்கு குறைவானது :**<br>குறைந்தபட்ச மாதாந்திர கட்டணம் 10KL ரூ.360/- வரை. கூடுதலாகும் ஒவ்வொரு KL க்கும் ரூ.45/-<br>**2) 501 முதல் 1200 சதுர அடி வரை :**<br>குறைந்தபட்ச மாதாந்திர கட்டணம் 10KL ரூ.450/- வரை. கூடுதலாகும் ஒவ்வொரு KL க்கும் ரூ.60/-<br>**3) 1201 முதல் 2400 சதுர அடி வரை :**<br>குறைந்தபட்ச மாதாந்திர கட்டணம் 10KL ரூ.540/- வரை. கூடுதலாகும் ஒவ்வொரு KL க்கும் ரூ.70/-<br>**4) 2401 சதுர அடிக்கு மேல்:** |

| | |
|---|---|
| | குறைந்தபட்ச மாதாந்திர கட்டணம் 10KL ரூ.630/- வரை. கூடுதலாகும் ஒவ்வொரு KL க்கும் ரூ.80/-<br>*மேற்குறிப்பிட்ட தொகை 2401 சதுர அடி பரப்பளவிற்கான அடிப்படை தொகையாகும். 2401 சதுர அடி பரப்பளவிற்கு மேல் உள்ள கட்டிடங்களுக்கு அதன் பரப்பளவிற்கேற்ப மேற்படி கட்டண விகிதங்களின் அடிப்படையில் கட்டணங்கள் உயர்த்தப்படவேண்டும். |
| (ii) தற்போது வசூலிக்கப்படும் குடிநீர் கட்டணத்திற்கான வைப்புத்தொகை ரூ. | உப விதிகளின் படி திருத்தம் செய்யப்பட வேண்டிய குடிநீர் கட்டணத்திற்கான வைப்புத்தொகை ரூ. |
| 1.வீட்டு உபயோகம் ரூ.7750/-<br>2. தொழிற்சாலைகள் ரூ.15000/-<br>3. வணிக நிறுவனங்கள் ரூ. 15000/- | <u>(அ) குடியிருப்பு உபயோகம் :</u><br>1) <u>500 சதுர அடிக்கு குறைவானது</u> :<br>வைப்பு தொகை ரூ. 10,000/–<br>2) <u>501 முதல் 1200 சதுர அடி வரை</u> :<br>வைப்பு தொகை ரூ. 12,000/–<br>3) <u>1201 முதல் 2400 சதுர அடி வரை</u> :<br>வைப்பு தொகை ரூ. 14,000/–<br>4) <u>2401 சதுர அடிக்கு மேல்</u> :<br>வைப்பு தொகை ரூ. 16,000/–<br><u>(ஆ) வணிகம் மற்றும் தொழில் சார்ந்த உபயோகம் :</u><br>1) <u>500 சதுர அடிக்கு குறைவானது</u> :<br>வைப்பு தொகை ரூ. 20,000/–<br>2) <u>501 முதல் 1200 சதுர அடி வரை</u> :<br>வைப்பு தொகை ரூ.24,000/–<br>3) <u>1201 முதல் 2400 சதுர அடி வரை</u> :<br>வைப்பு தொகை ரூ. 28,000/–<br>4) <u>2401 சதுர அடிக்கு மேல்</u>:<br>வைப்பு தொகை ரூ. 32,000/–<br>மேற்குறிப்பிட்ட வைப்புத்தொகை 2401 சதுர அடி பரப்பளவிற்கான அடிப்படை தொகையாகும். 2401 சதுர அடி பரப்பளவிற்கு மேல் உள்ள கட்டிடங்களுக்கு அதன் பரப்பளவிற்கேற்ப மேற்படி கட்டண விகிதங்களின்அடிப்படையில் வைப்புத் தொகை உயர்த்தப்படவேண்டும். |

எனவே மேற்கண்ட திருத்தியமைக்கப்பட உள்ள புதிய குடிநீர் கட்டணம் மற்றும் அதற்கான வைப்புத் தொகை விகிதங்கள் 05.01.2019-ம் தேதியன்று செய்தி மற்றும் மக்கள் தொடர்பு அலுவலர் விருதுநகர் அவர்கள் மூலம் மாலை தமிழகம் நாளிதழில் வெளியிடப்பட்டது. மேற்படி அறிவிக்கை செய்தி தாளில் வெளிவந்த நாளில் இருந்து 30 நாட்களுக்குள் ஆட்சேபணைகள் கோரப்பட்டது. ஆனால் நிர்ணயிக்கப்பட்ட காலக்கெடுவுக்குள் ஆட்சேபணைகள் ஏதும் பெறப்படவில்லை. எனவே குடிநீர் துணை விதிகளில் 01.04.2019 முதல் திருத்தியமைக்கப்பட உள்ள புதிய குடிநீர் கட்டணம் மற்றும் வைப்புத் தொகை விகிதங்கள் மாவட்ட அரசிதழில் வெளியிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு:-</u>

மன்றம் அனுமதிக்கலாம்
(ந.க.எண்.3257/2018/இ1)

**பொருள்–267**

திருத்தங்கல் நகராட்சி சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதித்திட்டம் **2018–19** (MLA Fund 2018-19) திட்டத்தின் கீழ் **13.02.2019** தேதி அன்று வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகள் விபரம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | வேலையின் விபரம் | மதிப்பீட்டு தொகை(இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | ஒப்பந்தப்புள்ளி விபரம் (% குறைவு ரூ. (% கூடுதல்) |
|---|---|---|---|---|
| **1** | வார்டு எண். **01** அண்ணா காலனியில் நியாய விலைக் கடை கட்டும் பணி | **10.00** | திரு.பி.முருகன் | **4.50**%கூடுதல் |
| | | | திரு. எம். கண்ணன் | **5.50**%கூடுதல் |

மேற்கண்ட பணிகளுக்கு வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட **4.50**%கூடுதலில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள ஒப்பந்ததாரர் திரு. பி. முருகன் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.

அலுவலக்குறிப்பு.

மன்றம் அனுமதிக்கலாம்

ந.க.எண்.**2376/2018/**இ**1**

**பொருள்–268**

திருத்தங்கல் நகராட்சி சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதித் திட்டம் 2018-19 (MLA Fund 2018-19) திட்டத்தின் கீழ் 13.02.2019 தேதி அன்று வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகள் விபரம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| **வ. எண்** | **வேலையின் விபரம்** | **மதிப்பீட்டு தொகை (இலட்சத்தில்)** | **ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள்** | **ஒப்பந்தப்புள்ளி விபரம் (%குறைவு ரூ. % கூடுதல்)** |
|---|---|---|---|---|
| 1. | **திருத்தங்கல் நகராட்சி** வார்டு எண்.21 சுக்கிரவார்பட்டி சாலையில் உள்ள குறுக்குத் தெருவில் சிமிண்ட் பேவர் பிளாக் சாலை அமைக்கும் பணி | 15.00 | திரு.பி.முருகன் | 6.30% கூடுதல் |
| | | | திரு.எம்.கண்ணன் | 4.90% கூடுதல் |

மேற்படி பணிகளுக்கு வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 4.90% கூடுதலில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள ஒப்பந்ததாரர் **திரு.எம்.கண்ணன்** அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்

(ந.க.எண் : 2376/இ1/2018)

**பொருள்–269**

திருத்தங்கல் நகராட்சி பகுதியில் டாக்டர் எம். ஜி.ஆர் அவர்களின் நூற்றாண்டு விழா (அரசு விழா) **23.10.2017** ம் தேதியன்று நடைப்பெற்றது. மேற்படி விழாவில் **2016–2017** ம் ஆண்டு வளர்ச்சித் திட்ட பணிகள் சாதனைகள் குறித்து தினமலர் நாளிதழில் விளம்பரம் செய்த வகைக்கு பட்டியல் தொகை ரூ. **16065/–** ஐ வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு–

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் அனுமதிப்பெற்று தொகை வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

ந.க.எண்.472/2018/இ1

பொருள்–270

விருதுநகர் மாவட்டம், சிவகாசி வட்டம் திருத்தங்கல் நகராட்சி க.எண். 62/6ஏ1 சுக்கிரவார்பட்டி ரோடு பகுதியில் வசித்து வருகின்ற என். வீரச்சாமி(லேட்) என்பவரின் மகன் வி. பாலமுருகன் என்பவர் திருத்தங்கல் நகராட்சி ஆணையாளரை 2ம் பிரதிவாதியாக சேர்த்து மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் சிவகாசி அ.வ.எண். 02/2016ன் படி வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்படி வழக்கிற்கு எதிர்வழக்காட திரு. சி. ஜான்., பி.ஏ.பி.எல் வழக்கறிஞர் மூலம் வக்காலத்து தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கினை நடத்துவதற்கான வழக்கறிஞர் கட்டணம் மற்றும் செலவு தொகை ரூ. 5000/–(ஐந்தாயிரம் மட்டும்)திரு. சி. ஜான். பி.ஏ.பி.எல் வழக்கறிஞர் அவர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலககுறிப்பு–

மன்றம் அனுமதிக்கலாம்

ந.க.எண்.69/2016/எப்1

பொருள்–271

விருதுநகர் மாவட்டம், சிவகாசி வட்டம் திருத்தங்கல் நகராட்சி க.எண். 41பள்ளிக்கூடத்தெரு பகுதியில் வசித்து வருகின்ற திரு. சீனிவாசன் என்பவரின் மகன் திரு.எஸ்.வேல்சாமி என்பவர் திருத்தங்கல் நகராட்சி ஆணையாளரை 3ம் பிரதிவாதியாக சேர்த்து சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் வழக்கு எண். W.P.(MD)No.24284/2018 ன் படி வழக்கு தொடர்ந்துள்ளதார். மேற்படி வழக்கிற்கு எதிர்வழக்காட திரு. எம். இராஜராஜன் பி.ஏ.பி.எல் அரசு வழக்கறிஞர் மூலம் வக்காலத்து தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கினை நடத்துவதற்கான வழக்கறிஞர் கட்டணம் மற்றும் செலவுத் தொகை ரூ. 10000/–(ரூபாய் பத்தாயிரம் மட்டும்) திரு. ஆ. இராஜராஜன் பி.ஏ.பி.எல் அரசு வழக்கறிஞர் அவர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலககுறிப்பு–

மன்றம் அனுமதிக்கலாம்

ந.க.எண்.2740/2018/எப்1

பொருள்–272

திருத்தங்கல் நகராட்சி விருதுநகர் மாவட்ட கனிமவள அறக்கட்டளை நிதி திட்டம் 2018-19 (Mines and Minerals) திட்டத்தின் கீழ் இந்நகர் பகுதிகளில் தார்ச்சாலைகள் அமைக்கும் பணிகளுக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.450.00 (ரூபாய் நாநூற்றி ஐம்பது இலட்சம் மட்டும்) மதிப்பீட்டு தயார் செய்து மேற்படி மதிப்பீட்டுத் தொகையை அரசு மானியமாக பெறுவதற்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு கீழ்கண்ட விவரப்படி திட்ட பிரேரணை தயார் செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| **வ.எண்** | **வேலையின் பெயர்** | **மதிப்பீட்டுத் தொகை ரூ. இலட்சத்தில்** |
|---|---|---|
| 1 | **திருத்தங்கல் நகராட்சி**<br>சுக்கிரவார்பட்டி சாலை முதல் பெரிய குளம் கண்மாய் வரை உள்ள சாலை 2 எண்ணம் பாலங்களுடன் தார்ச்சாலை அமைக்கும் பணி | 150.00 |

| | | |
|---|---|---|
| 2 | **திருத்தங்கல் நகராட்சி**<br>இந்திரா நகர், 52 வீட்டுக்காலனி , எம்.ஜி.ஆர் நகர் மற்றும் கண்ணகி காலனி ஆகிய பகுதிகளில் தார்ச்சாலை அமைக்கும் பணி | 150.00 |
| 3 | **திருத்தங்கல் நகராட்சி**<br>வார்டு எண். 18 சுக்கிரவார்பட்டி மெயின் ரோடு மற்றும் குறுக்குத் தெருக்களில் தார்ச்சாலை அமைக்கும் பணி | 150.00 |
| | **மொத்தம்** | **450.00** |

அலுவலக்குறிப்பு:-

மன்றம் அனுமதிக்கலாம்

ந.க.எண்.3594/2018/இ1

பொருள்–273

திருத்தங்கல் நகராட்சி பொது நிதித் திட்டம் 2018-19 (General Fund 2018-19) திட்டத்தின் கீழ் 15.02.2019 தேதி அன்று வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகள் விபரம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் விபரம் | மதிப்பீட்டு தொகை (இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | ஒப்பந்தப்புள்ளி விபரம் (%குறைவு ரூ. % கூடுதல்) |
|---|---|---|---|---|
| 1. | **திருத்தங்கல் நகராட்சி**<br>திருத்தங்கல் நகராட்சி பேட்டரி ஆப்பரேட்டர் வாகனங்களுக்கான சார்ச் பாயிண்ட்கள் அமைக்கும் பணி | 1.00 | திரு.பி.முருகன் | 1.09% கூடுதல் |
| | | | திரு.எம்.கண்ணன் | 0.05% கூடுதல் |

மேற்படி பணிகளுக்கு வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.05% கூடுதலில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள ஒப்பந்ததாரர் திரு.எம்.கண்ணன்அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்

(ந.க.எண் : 1570/இ1/2018)

பொருள்–274

திருத்தங்கல் நகராட்சி பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் பகுதி வளர்ச்சி திட்டம் 2018-19 திட்டத்தின் கீழ் 15.02.2019 தேதி அன்று வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகள் விபரம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் விபரம் | மதிப்பீட்டு தொகை (இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | ஒப்பந்தப்புள்ளி விபரம் (%குறைவு ரூ. % கூடுதல்) |
|---|---|---|---|---|
| 1. | **திருத்தங்கல் நகராட்சி**<br>திருத்தங்கல் நகராட்சி வார்டு எண். 21 சிவகாசி - விருதுநகர் ரோடு ராஜ்கமல் ஹோட்டல் முதல் சுக்கிரவார்பட்டி ரோடு வரை 12 மின் கம்பங்களில் 150 வாட்ஸ் LED பல்ப் கொண்ட 12 மின்விளக்குகள் அமைக்கும் பணி | 3.35 | Sri Ramakrishna Agency | 1.46% கூடுதல் |
| | | | Sri Ramakrishna Electricals | 8.71% கூடுதல் |

| | | | | |
|---|---|---|---|---|
| 2. | **திருத்தங்கல் நகராட்சி**<br>திருத்தங்கல் நகராட்சி வார்டு எண். 21 சுக்கிரவார்பட்டி ரோட்டில் 18 மின் கம்பங்களில் 150 வாட்ஸ் LED பல்ப் கொண்ட 18 மின்விளக்குகள் அமைக்கும் பணி | 5.00 | Sri Ramakrishna Agency | 1.45% கூடுதல் |
| | | | Sri Ramakrishna Electricals | 8.50% கூடுதல் |
| 3. | **திருத்தங்கல் நகராட்சி**<br>திருத்தங்கல் நகராட்சி வார்டு எண். 21 சுக்கிரவார்பட்டி ரோடு குறுக்குத் தெருவில் ரோட்டில் 5 மின் கம்பங்களில் 150 வாட்ஸ் LED பல்ப் கொண்ட 5 மின்விளக்குகள் அமைக்கும் பணி | 1.40 | Sri Ramakrishna Agency | 1.45% கூடுதல் |
| | | | Sri Ramakrishna Electricals | 8.50% கூடுதல் |
| 4. | **திருத்தங்கல் நகராட்சி**<br>திருத்தங்கல் நகராட்சி வார்டு எண். 18 சுக்கிரவார்பட்டி ரோடு குறுக்குத் தெருவில் ரோட்டில் 5 மின் கம்பங்களில் 150 வாட்ஸ் LED பல்ப் கொண்ட 5 மின்விளக்குகள் அமைக்கும் பணி | 1.40 | Sri Ramakrishna Agency | 1.45% கூடுதல் |
| | | | Sri Ramakrishna Electricals | 8.50% கூடுதல் |
| 5. | **திருத்தங்கல் நகராட்சி**<br>திருத்தங்கல் நகராட்சி வார்டு எண். 18 சுக்கிரவார்பட்டி ரோடு குறுக்குத் தெருவில் ரோட்டில் 5 மின் கம்பங்களில் 150 வாட்ஸ் LED பல்ப் கொண்ட 5 மின்விளக்குகள் அமைக்கும் பணி | 1.40 | Sri Ramakrishna Agency | 1.45% கூடுதல் |
| | | | Sri Ramakrishna Electricals | 8.50% கூடுதல் |
| 6. | **திருத்தங்கல் நகராட்சி**<br>திருத்தங்கல் நகராட்சி வார்டு எண் 18-ல் சுக்கிரவார்பட்டி ரோடு பாலாஜி நகரில் 12 மீட்டர் உயரமுள்ள 6 எண்ணிக்கை கொண்ட 150 வாட்ஸ் LED பல்ப், தானியங்கி சுவிச்சு உடன் கூடிய சிறிய மின் கோபுர விளக்கு அமைக்கும் பணி | 3.50 | Sri Ramakrishna Agency | 1.46% கூடுதல் |
| | | | Sri Ramakrishna Electricals | 8.71% கூடுதல் |
| 7. | **திருத்தங்கல் நகராட்சி**<br><br>திருத்தங்கல் நகராட்சி வார்டு எண் 19-ல் ஆசாரிமார் நந்தவனத் தெருவில் 12 மீட்டர் உயரமுள்ள 6 எண்ணிக்கை கொண்ட 150 வாட்ஸ் LED பல்ப், தானியங்கி சுவிச்சு உடன் கூடிய சிறிய மின் கோபுர விளக்கு அமைக்கும் பணி | 3.50 | Sri Ramakrishna Agency | 1.46% கூடுதல் |
| | | | Sri Ramakrishna Electricals | 8.71% கூடுதல் |

மேற்காண் அட்டவணை வரிசை எண். 1 உள்ள பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டுத் தொகையினை விட 1.46% கூடுதலில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி, வரிசை எண். 2,3,4 மற்றும் 5--ல் உள்ள பணிக்களுக்கு மதிப்பீட்டுத் தொகையினை விட 1.45 % கூடுதலில் குறைந்த ஒப்பந்தப்புள்ளிகள், வரிசை எண். 6மற்றும் 7-ல் உள்ள பணிகளுக்கு மதிப்பீட்டுத் தொகையினை விட 1.46% கூடுதலில் குறைந்த ஒப்பந்தப்புள்ளிகள் வழங்கியுள்ள ஒப்பந்ததாரர் திரு. Sri Ramakrishna Agency அவர்களின் ஒப்பந்தப்புள்ளி மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு–**

அனுமதி அளிக்கலாம்.

(ந.க.எண் : 3789/இ1/2018)
பொருள்–275

இந்நகராட்சியில் **01.04.2019** முதல் திருத்தியமைக்கப்படவுள்ள கட்டிட உரிமையாணை கட்டணம் மற்றும் இதர கட்டணம் விகிதங்கள் தொடர்பாக உள்ள விளம்பர அறிவிக்கையை செய்தி மற்றும் மக்கள் தொடர்பு அலுவலர் விருதுநகர் அவர்கள் மூலம் மாலை தமிழகம் நாளிதழில்

18.02.2019 அன்று வெளியிட்டவகையில் பட்டியல் எண். MT0967/2018-19 நாள். 20.02.2019 ரூ. 71032/—ஐ (ரூபாய் எழுபத்தி ஒரு ஆயிரத்து முப்பத்தி இரண்டு மட்டும்) மாலை தமிழகம் நாளிதழுக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு –

மன்றம் அனுமதிக்கலாம்

ந.க.எண்.2239/2018/சி1

பொருள்—276

இந்நகராட்சி அம்மா உணவத்திற்கு 2019—2020ம் ஆண்டிற்கு தேவையான அரிசி, மளிகைப்பொருட்கள், பால், கேஸ், காய்கறிகள் மற்றும் மகளிர் குழுவிற்கு வழங்க வேண்டிய ஊதியம் ஆகியவற்றிற்கான உத்தேச செலவினம் ரூ. 50,00,000/— (ரூபாய் ஐம்பது லட்சம் மட்டும்) மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு—

மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.155/2014/அ1

பொருள்—277

திருத்தங்கல் நகராட்சியில் அம்மா உணவகத்தில் மகளிர் சுயஉதவிக்குழுவில் பணிபுரியும் பணியாளர்களுக்கு ஒவ்வொரு மாதம் வழங்கும் ஊதியத்தில் 12 (சதவீதம்) நிர்வாக பங்கு தொகையாக வருங்கால வைப்பு நிதி நிறுவனம் மதுரைக்கு செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு—

மன்றம் ஆனுமதிக்கலாம்

ந.க.எண்.175/2016/அ1

பொருள்—278

இந்நகராட்சி 2017—18ம் ஆண்டிற்குரிய, ஆண்டு கணக்கினை தயார் செய்தமைக்கு அதற்கான தொகை ரூ. 30,000/—ஐ திரு. வி. சீனிவாசன் ஆலோசகர் (Consultant)வழங்க கோரியுள்ளார். எனவே மேற்படி தொகையை தனியருக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு—

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

ந.க.எண்.489/2018/சி1

பொருள்—279

இந்நகராட்சியில் 2018—19ம் ஆண்டிற்குரிய வரவு செலவு திட்டம் மற்றும் 2019—20ம் ஆண்டிற்குரிய திருத்திய வரவு செலவு திட்டம் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு—

மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

ந.க.எண்.488/2018/சி1

பொருள்—280

இந்நகராட்சி 2019—2020—ம் ஆண்டிற்கு அம்மா உணவகத்திற்கு தேவையான காய்கறிகள், மளிகைப் பொருட்கள் 2018—2019ம் ஆண்டிற்கு கொடுத்துள்ள குறைந்த விலைப்புள்ளி அடிப்படையிலேயே விநியோகம் செய்வதாக 22.02.2019 அன்று சிதம்பரனார் ஒப்பந்ததாரருக்கு

அச்சக தொழில் கூட்டுறவு சங்கம் தூத்துக்குடி விண்ணப்பித்துள்ளார். இந்நிலையில் 2019–2020ம் ஆண்டிற்கான அம்மா உணவகத்திற்கு தேவையான காய்கறிகள் , மளிகைப்பொருட்கள் வாங்குவதற்கு விலைப்புள்ளி கோருவதால் இன்றைய நிலவரப்படி கூடுதல் செலவினம் ஏற்பட வழிவகை உள்ளது. எனவே கூடுதல் செலவினங்களை தவிற்கும் விதமாக 2019–2020ம் ஆண்டிற்கு அம்மா உணவகத்திற்கு தேவையான காய்கறிகள், மளிகைப்பொருள்கள் ஆகியவைகளை 2018–2019ம் ஆண்டில் மேற்படி கூட்டுறவு நிறுவனம் கொடுத்துள்ள குறைந்த விலைப்புள்ளி அடிப்படையிலேயேயும் கூடுதல் மேலும், பால், கேஸ் சிலிண்டர்கள், அரிசி ஆகியவைகளை அன்றைய மார்க்கெட் நிலவரப்படி அரசு துறை சார்ந்த நிறுவனத்தில் இருந்து தொடர்ந்து வாங்குவதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு–

மன்றம் அனுமதிக்கலாம்

(ந.க.எண்.155/2014/அ1)

பொருள்–281

நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை, நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் திருநெல்வேலி, மாவட்ட ஆட்சிதலைவர் விருதுநகர், துணை இயக்குனர் பொது சுகாதார பணிகள் சிவகாசி அவர்களின் அறிவுறுத்தலின் படி கோடை மழை பெற வாய்ப்புள்ளதாலும், ஏப்ரல்–19 மாதத்திலிருந்து வறட்சி ஏற்பட வாய்ப்புள்ளதால் வறட்சி காரணமாக பொது மக்கள் தண்ணீர் சேமித்து வைத்து கொசுப்புழு உருவாக வாய்ப்புள்ள காரணத்தால், கொசுவினால் பரவும் நோய்களான டெங்கு சிக்குன் குனியா, மலேரியா போன்ற காய்ச்சல் ஏற்பட வாய்ப்புள்ளதால் இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட 21 வார்டு பகுதிகளில் கொசு புழு ஒழிப்பு பணியான அபேட் மருந்து ஊற்றுதல், புகை மருந்து அடித்தல் மற்றும் தண்ணீர் தேங்க கூடிய தேவையற்ற பொருட்களை அப்புறபடுத்துதல் நிலவேம்பு குடிநீர் வழங்குதல், போன்ற பணிகளை அமுதசுரபி என்ற மகளிர் சுய உதவி குழு மூலம் 55 தற்காலிக மஸ்தூர் பணியாளர்கள் (Domestic Breeding Cleaners) கொண்டு ஆண்டு முழுவதும் 01/04/2019 முதல் 31/03/2020 வரை (ஏப்ரல்–19 முதல் மார்ச் 2020 வரை) மேற்கொள்ளவும் அவர்களுக்கான ஊதியத்தை மாவட்ட ஆட்சித் தலைவர் விருதுநகர் அவர்களின் செயல்முறை ஆணை (ந.க.எண்.ஏ7/18069/2018 நாள். 24/07/2017 பட்டியலில் வ.எண். 81ல் கூறியுள்ளப்படி நபர் ஒன்றுக்கு நாளொன்றுக்கு :ரு/ 208/–வீதம் வழங்கவும் அதற்கான உத்தேச செலவினத் தொகை ரூ. 36.00 லட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலககுறிப்பு–

பொது சுகாதார அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.802/2018/எச்1

பொருள்–282

இந்நகராட்சி 21 வார்டுகள் கொண்ட முதல்நிலை நகராட்சியாகும். 2011ம் ஆண்டு மக்கட் தொகை கணக்கெடுப்பின் படி 55362 ஆகும். நகரின் மொத்த பரப்பளவு 13.00 ச.கி.மீ ஆகும். தற்சமயம் 19446 குடியிருப்புகளும், நாளொன்றுக்கு 16.00 மெட்ரிக் டன் குப்பை உருவாகி வளர்ந்து வரும் நகராட்சியாகவும் உள்ளது. அரசாணை (நிலை)எண்.101 நகராட்சி நிர்வாகம் குடிநீர் வழங்கல் (நப3)துறை நாள்.30.04.1997ன் படி 227 துப்புரவுப் பணியாளர்கள் பணி செய்ய வேண்டிய இடத்தில் 36 துப்புரவு பணியாளர்கள் மட்டுமே தற்சமயம் பணி செய்து வருகின்றனர். எனவே 227 துப்புரவுப் பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் நியமித்து கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் அனுமதி பெறப்பட்டு (ந.க.எண்.K.D.S 28369/J3.2018 நாள்.04.12,18)04.032019ல் கோரப்பட்டது. இச்சூழ்நிலையில் பாராளுமன்ற தேர்தல் 2019 தொடர்பான தேர்தல் நடத்த வாய்ப்புள்ளதால் எனவே ஒப்பந்தப்புள்ளியை முடிவு செய்ய முடியாத நிலை உள்ளது.எனவே சென்ற ஆண்டு (2018–19)ல் SKMS அக்ஷ மகளிர் மன்றம்(17 நபர்கள்) புன்னகை மகளிர் மன்றம் (17 நபர்கள்) அமுத சுரபி மகளிர் மன்றம் (17 நபர்கள்) குப்பை அள்ளுதல், குப்பை வாங்குதல், வாறுகால் சுத்தம் செய்தல் போன்ற துப்புரவு பணிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் விருதுநகர், அவர்களின் தினக்கூலி அடிப்படையில் நபர் ஒன்றுக்கு நாளொன்றுக்கு ரூ. 195/– என்ற விகிதத்தில் பணி காலம் 31/03/2019 உடன் முடிவடைய உள்ளதால் தனியார் மயம் மூலம் துப்புரவு பணி மேற்கொள்வதற்கான ஒப்பந்த புள்ளியினை முடிவு செய்யும் வரை பொது சுகாதார பணி அத்தியாவசிய தேவையினை கருத்திற்கொண்டு, மேலும் நான்கு மாத காலம் ஏப்ரல் 2019 முதல் ஜுலை2019 வரை கால நீட்டிப்பு செய்யவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ. 13.00 லட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு
பொது சுகாதார அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.498/2018/எச்1

பொருள்–283

இந்நகராட்சி பகுதியில் கொசு ஒழிப்பு பணியான அபேட் மருந்து ஊற்றுதல், புகை மருந்து அடித்தல், தண்ணீர் தேங்க கூடிய தேவையற்ற பொருட்களை அப்புறபடுத்துதல் மற்றும் நில வேம்பு குடிநீர் வழங்குதல் போன்ற பணிகள் 55 தற்காலிக மஸ்துார் பணியாளர்கள் (DBC) மூலம் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. தற்சமயம் மருந்து ஊற்றும் பணிக்கு தேவையான அபேட் (Temlates Enubrable 50% Ec) மற்றும் புகைப்பரப்பும் பணிக்கு தேவையான பைரித்ரம் (Pyrethium 2% Exbract) இருப்பு இல்லை என்பதால், தமிழ்நாடு மருந்து கழகம் சென்னை அவர்களின் கடிதம். ந.க.எண். 015/M/(P)/ INSECT-LARVI(u)/TNMSC/2017 நாள். 14.11.2018ன் படி அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமான(TamilNadu Medical service corporation Ltd. Chennai) M/S paramount pesticide Ltd.No.2/3 1st floor. Muthukrishnan street. T.Nagar.Chennai-17 என்ற நிறுவனம் மூலம் அபேட் மருந்து (Temples Enubrable 50%Ec) 200 லிட்டர் (Pyrethium 2% Extract)100லிட்டர் வாங்க ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ. 3.00 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

பொது சுகாதார பணியின் அத்தியாவசிய தேவையினை கருத்திற்கொண்டு தமிழ்நாடு மருத்துவகழகம் சென்னை மூலம் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் அபேட் மற்றும் பைரித்ரம் வாங்குவதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

ஆணையாளர்/தனி அலுவலர்
திருத்தங்கல் நகராட்சி